புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# ஈரோடு மாவட்டக் கொங்கு வேட்டுவக் கவுண்டர்களின் நம்பிக்கைகளில் அறிவியல் கண்ணோட்டம்

**ஆய்வாளர்**
*சுந்தராம்பாள் .க,*
*முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*பெரியார் பல்கலைக்கழகம்,*
*சேலம் - 636 011.*

**நெறியாளர்**
*முனைவர்.ம.சுந்தரமூர்த்தி*
*பேராசிரியர்*
*தமிழ்த்துறை,*
*பெரியார் பல்கலைக்கழகம்,*
*சேலம் - 636 011.*

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களுக்குத் தீர்வு காண இயலாத நிலையிலும், இயற்கையின் புதிரான செயல்களை அறிவு கொண்டு உணர இயலாத நிலையிலும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. மனிதனின் ஒவ்வொரு செயல்பாடுகளும் நம்பிக்கையைத் தோற்றுவாயகக் கொண்டிருக்கிறது. மனிதனிடம் தோன்றிய அச்சம், ஆசை, தன்னலக்காப்புணர்வு போன்றவைகள் நம்பிக்கையின் தோற்றத்திற்கான காரணங்களாக அமைகின்றன. மனித வாழ்வில் பிறப்பில் தொடங்கும் நம்பிக்கை இறப்பு வரை ஒவ்வொரு நிலையிலும் வெவ்வேறு வடிவங்களில் பின் தொடர்ந்த வண்ணம் உள்ளது. மனிதன் இயற்கையின் தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலேயே நம்பிக்கைகள் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியர் காலம் தொடங்கி இன்றைய நவீன அறிவியல் காலம் வரை நம்பிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மனிதர்களின் வாழ்வில் பிறப்பில் தொடங்கும் நம்பிக்கை திருமணம், இறப்பு, பழக்கவழக்கம், திருவிழா, வழிபாடு போன்ற அனைத்து வாழ்வியல் கூறுகளிலும் நம்பிக்கைகள் மனிதர்களோடு பின்னிப் பிணைந்துள்ளதால் நம்பிக்கைகள் பெற்றுள்ள தனித்துவமும், இன்றியமையாமையும் பெற்றுத் திகழ்கின்றன. மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து பின்ப்றப்பட்டு வருவதை உற்றுநோக்கினால் இதனைச் சமதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி என்று குறிப்பிடலாம். இன்றைய அறிவியல் உலகில் மனிதன் தொழில் நுணுக்க வளர்ச்சியால் கண்டறியும் அறிவியல் உண்மைகளை, நாட்டுப்புற ஊரக மக்கள் இயற்கையை அறிந்து உற்றுநோக்கியும், தம் முன்னோர்கள் கண்டு பின்பற்றிய அனுபவ அறிவின் வாயிலாகவும் அறிந்திருந்தனர் என்பதனை மக்களிடம் நிலவும் நம்பிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. நம்பிக்கைகள் தோன்றிய காலகட்டம் சூழ்நிலை ஆகியனவற்றினை நோக்கும் போது அவற்றில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகள் புலப்படுகின்றன. இயற்கையோடு இயைந்து வாழும் பழங்குடி மக்கள் முதல் இன்றைய அறிவியல் உலகோடு ஒட்டி வாழும் நவீன மக்கள் வரை பல நம்பிக்கைகள் காணப்படுகின்றன. அவ்வகையில் ஈரோடு மாவட்ட*

வேட்டுவக்கவுண்டரின மக்களிடம் பல வகையான வாழ்வியல் நம்பிக்கைகள் அவர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. இவ்வின மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளில் பொதிந்துள்ள அறிவியல் சிந்தனைகளையும், கண்ணோட்டங்களையும் பற்றி எடுத்துரைப்பதனை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

மனித வாழ்வில் நிலவும் நம்பிக்கைகளின் அடிப்படைக் காரணங்களைப் பற்றி முழுமையாக அறிய முடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டதாகவே இயங்குகிறது என்பதைக் காணமுடிகிறது. நம்பிக்கைகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றன. மனிதனின் பிறப்பு முதற் கொண்டயையும் நம்பிக்கைகள் அவனின் இறப்பிற்குப் பின்னரும் பல வகைககளில் பின்பற்றப்படுவதன் வழி மனித வாழ்வின் இயக்கத்திற்குத் துணைநிற்கும் தூண்களாக நம்பிக்கைகள் திகழ்கின்றன. மனித வாழ்வின் அடிப்படையாகக் கருதப்படுவதனால் மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்களாக நம்பிக்கைகள் விளங்குகின்றன .

**அறிவியல்**

அறிவியல் என்பது science என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. science என்ற சொல் அறிவு எனப் பொருள்படும். மனிதன் வாழும் சூழ்நிலை, சுற்றியுள்ள உலகம் போன்ற பிற கூறுகள் பற்றித்தான் அறிவியல் துறைகள் விளக்குகின்றன. அறிவியல் என்பது ஆற்றல் உடையதாகவும், சமுதாயத்திற்குப் பயனாற்றக் கூடியதாகவும் உள்ளது. கால மாற்றங்களுக்கு ஏற்ப பழமையானவை மாற்றம் பெற்று புதுமைகள் மக்களிடம் புழக்கத்திற்கு வருவது இயல்பாகும். இதனை,

**“பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினானே”[1]**

என்னும் நன்னூல் நூற்பா கால மாற்றத்திற்கு ஏற்பப் பழையன மாற்றம் பெற்று புதியன புகுதல் நிகழும் என்று குறிப்பிடுகிறது.

**நம்பிக்கைகள்**

ஒரு இனக்குழுவானது தனக்கான பண்பாட்டைக் கொண்டு தனித்து விளங்கக் கூடியதாகும். அத்தகைய பண்பாட்டு நிலையில் பல அடிப்படைக் கூறுகள் நிறைந்துள்ளன. அவ்வகையில் ஈரோடு மாவட்ட வேட்டுவக் கவுண்டர்களின் பண்பாட்டில் நம்பிக்கைகள் மிக முக்கியமானதோர் இடம் வகிக்கின்றன. இத்தகு நம்பிக்கை பற்றி,

**“நம்பும் மேவும் நசையாகுமே’’[2]**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நம்பு என்ற சொல்லிற்கு நசை அல்லது விருப்பம் என்னும் பொருள் கூறப்படுகிறது. மேலும்,

**“நாடல் சான்றோர் நம்புதல் பழி எனின்**
**பாடு இல கலுழும் கண்ணொடு**
**சாதலும் இனிதே காதல்அம் தோழி”[3]**

என்னும் நற்றிணைப் பாடலில் ‘நம்புதல்’ என்ற சொல்லாட்சி ‘நம்பிக்கை’ என்னும் பொருளில் பயன்பட்டு வந்துள்ளது. விரும்புகின்ற சான்றோராகிய அவரை நம்புவதால் பழி உண்டாகுமானால் அவரை நினைத்து உறங்காமல் அழுது கொண்டிருக்கும் கண்ணோடு இறந்து போவதும் இனிமைதான் என்று குறிப்பிடுவதன் வழி நம்பு என்ற சொல் முதலில் ‘விருப்பம்’ என்னும் பொருளைக் குறித்து, பின் ‘நம்பிக்கை’ என்ற பொருளில் நிலைபெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

**‘யானையின் பலம் தும்பிக்கையிலே’**
**‘மனிதனின் பலம் நம்பிக்கையிலே’**

என்ற முதுமொழி மனிதர்களின் வாழ்வியலில் நம்பிக்கைகள் பெற்றுள்ள முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. இத்தகைய நம்பிக்கைகள் ஈரோடு மாவட்ட வேட்டுவக்கவுண்டரின மக்களிடம் பல வகைகளில காணப்படுகின்றன.

**குழந்தைப்பேறு**

குழந்தைப்பேறு என்பது ஒருவரின் தலைமுறையினை நிலைநாட்டி அவர்தம் பரம்பரையை வளரச் செய்வது. அவ்வகையில் குழந்தைப்பேறு போற்றுதலுக்கு உரியதாகவும், அனைத்துச் செல்வங்களிலும் மேம்பட்டதாகவும் மழலைச் சொல்லின் இனிமையினையும் பற்றி கருதப்படுவதனை,

***“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்***
***மழலைச்சொல் கேளா தவர்”[4]***

*என்னும் திருக்குறளின் வாயிலாக குழந்தைப்பேற்றின் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். இதன் மூலம் குழந்தைப்பேறு என்பது மனித வாழ்வில் பெற்றுள்ள தனித்துவத்தை அறியமுடிகிறது. இத்தகைய குழந்தைப் பேற்றின் போதும் சில நம்பிக்கைகள் இவ்வின மக்களிடம் நிலவுகின்றன. ‘‘மகப்பேறு என்பது ஒரு பெண்ணின் மறுபிறப்பு போன்றதாகும். மகப்பேற்றுக் காலங்களில் பிரசவத்தின் போது ஏற்படும் வலிகளைக் குறைக்கவும், சுகப் பிரசவம் நிகழவும் பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படும். அவற்றில் ஒன்று விளக்கெண்ணைப் பயன்பாடு ஆகும். பிரசவத்தின போது அப்பெண்ணின் வயிற்றில் விளக்கெண்ணையைத் தடவினால் அப்பெண்ணிற்கு பிரசவ வழி குறையும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளதன் வழி அறுவை சிகிச்சை போன்றவற்றைத் தவிர்க்கும் தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளது புலப்படுகிறது.*

*குழந்தை பிறந்த பின் அக்குழந்தைக்கு குழந்தையின் தாய் அல்லது தந்தைவழி உறவினர்களில் நற்குணம் மற்றும் குழந்தைப்பேறு பெற்று நன்முறையில் சிறப்பாக வாழும் யாரேனும் மூன்று நபர்களை அழைத்து பிறந்த குழந்தையின் வாயில் தேன் அல்லது சர்க்கரைத் தண்ணீரை மூன்று முறை வைக்கச் செய்வர். இவ்வாறு செய்வதன் மூலம் நற்குணமுடைய பெரியோர்களின் வாழ்வினைப் போன்ற சிறப்பான வாழ்வு அக்குழந்தைக்கும் அமையும் என்று நம்பிக்கை இருப்பினும் பிறந்த குழந்தைக்கு தேன் அல்லது சர்க்கரைத் தண்ணீர் வைப்பதன் மூலம் குழந்தையின் உடலில் உள்ள தேவையற்ற கழிவுகள் வெளியேறிவிடும் என்பது அறிவியல் காரணமாகக் கருதப்படுகின்றது.’’[5] பிறந்த குழந்தைக்கு குழந்தை பிறந்த ஒரு வருடத்தில் முடியெடுத்துக் காது குத்துவதன் மூலம் அக்குழந்தை கருவிலிருந்த போது தலையில் தேங்கிய தேவையற்ற கழிவுகள் நீங்கவும், தலைமுடி ஆரோக்கியமாக இருக்கவும் வேண்டி முடியெடுத்தலும், காதுகளில் ஒரு சிறு துளையிட்டால் அதன் மூலம் காதுகளின் இயங்குதிறன் மேம்பட்டிருக்கும் என்று கருதி காதுகுத்துதலும் நம்பிக்கை சார்ந்த அறிவியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் பின்பற்றுகின்றனர்.*

***கண் திருட்டி கட்டுதல்***

*கண் திருட்டி கட்டும் வழக்கம் மக்களிடம் இன்றும் வழக்கில் உள்ள ஒன்றாகும். பழங்காலம் அறிவியலும், தொழில்நுட்பமும் பெருமளவு வளர்ச்சியடையாக் காலம். திடீரென ஏற்படும் நோய்களையும், பாதிப்புகளையும் கண்ட மக்கள் சற்று அச்சத்துடன் கையாண்டுள்ளனர். மருத்துவ வசதிகளற்ற அக்காலத்தில் தங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முக்கியத்துவம் பெற்ற பொருட்களைப் பாதுகாத்து வைக்கும் வழக்கத்தைப் பின்பற்றியுள்ளனர். முற்காலங்களில் மக்கள் காடுகளையொட்டிய பகுதிகளில் அதிகளவில் வசித்தபோது பூச்சிகளின் தொல்லைகள் அதிகளவில் இருந்ததன் காரணமாக அதன் தாக்கத்திற்கு மக்கள் அதிகளவில் உட்பட்டனர். விடத்தன்மை கொண்ட பூச்சிகள் மக்களைத் தாக்கினால் அவர்களுக்கு உடனடியாக முதலுதவி வழங்க வேண்டும் என்பதற்காக வீட்டின் வாசலில் பூச்சிகளின் விடத்தை முறிக்கக்கூடிய எலுமிச்சை மற்றும் மிளகாய், வேப்பிலை போன்றவற்றைக் கட்டி வைத்தனர். இவை மருத்துவக்குணம் உடையதால் அவற்றை ஆபத்துக் காலத்தில் அனைவரும் எடுத்துப் பயன்படுத்தும் அறிவியல் சார்ந்த சிந்தனையின் வெளிப்பாடகக் கருதி இத்தகைய கண்திருட்டி கட்டும் வழக்கத்தைப் பின்பற்றியுள்ளனர்.*

***திருமணம்***

*திருமணம் என்பது மனித வாழ்வில் முக்கியப் பங்குபெறுகின்றது. சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஆண், பெண் உறவு நிலையே திருமணம். மனிதனால் மனித நலன் கருதிப் படைத்துக் கொள்ளப்பட்ட ஒரு ஒழுக்க நெறியே திருமணமாகும். அத்தகைய திருமணம் பற்றிய நம்பிக்கைகள் சில இவ்வின மக்களிடம் காணப்படுகின்றன.*

*‘‘ஆடி மாதத்தில் திருமணம் செய்வதை இவ்வின மக்கள் தவிர்க்கின்றனர். அவ்வாறு திருமணம் செய்தால் கணவன், மனைவி இருவரும் இல்லற வாழ்வில் ஈடுபட்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை சித்திரை மாதத்தில் பிறக்க நேரிடும். சித்திரை மாதம் கோடை காலம் என்பதால் வெய்யிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். புதிதாகப் பிறக்கும் குழந்தைக்கு வெய்யிலின் தாக்கத்தால் உடல் சூடு அதிகமாகி அம்மை போன்ற நோய்கள்*

ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்னும் தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளதால் சித்திரை மாதம் திருமணம் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொள்வதில்லை. சுமங்கலிப் பெண்கள் தினமும் மஞ்சள் பூசிக் குளிப்பதால் மங்கலம் உண்டாகும் என்பதும் ஒரு அறிவியல் கண்ணோட்டமாகும். மஞ்சள் கிருமி நாசினியாகச் செயல்படுவதால் உடல் கிருமித்தொற்றுக்கு உட்படாமல் நோயுறும் நிலையிலிருந்து காக்கப்படுகிறது."[6]என்று தகவலாளர் குமுதா என்பவர் குறிப்பிடுகிறார். புரட்டாசி மாதம் வெயில் அதிகமாக் கொளுத்தும் காலமாகும். அச்சமயம் மழைக்காலமும் தொடங்கும் பருவமாகும். வெயிலும், மழையும் சேர்ந்து இயங்கக்கூடிய இச்சீதோசன நிலை, வெயில் காலத்தை விட மிகவும் மோசமானதாக இருக்கும். இச்சமயத்தில் அசைவ உணவுகளை உட்கொண்டால் நம் உடலில் வெப்பம் அதிகமாகி உடல் சூடு ஏற்பட்டு உடலில் சில பாதிப்புக்ள ஏற்படும் என்னும் காரணத்தினடிப்படையில் புரட்டாசி மாதம் அசைவ உணவுகளை உட்கொள்ளக்கூடாது என்பர்;.

**இறப்புச் சடங்கு**

இறப்புச்சடங்கு என்பது மனிதனின் வாழ்வில் இறுதியாக மேற் கொள்ளப்படும் சடங்கியல் சார்ந்த செயல்பாடாகும். தங்களின் மகிழ்ச்சி மற்றும் இன்பங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டாலும் ஒருவரின் இறப்பில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்பர். மனிதர்கள் பல்வேறு வகைகளிலும், பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டு இறக்க நேரிடுகிறது. இத்தகைய மனிதனின் இறப்புச் சடங்கில் கலந்து கொள்வதன் மூலம் இறந்தவரின் வாழ்வியல் பற்றி அறிய முற்படும் போது இறந்தவரின் நிலை போன்று தங்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று எண்ணித் தங்களின் வாழ்வியலை மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் வாழ வேண்டும் என்ற காரணத்தினால் இறப்பு நிகழ்வில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்பர்.

ஒருவர் இறந்த பின் அவரின் உற்றார், உறவினர்கள் ஈமச்சடங்கில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அருகில் தான் இருக்க வேண்டி வரும். நேரம் அதிகமாகும் போது கொஞ்சம் கொஞ்சமாக உடல் கெட்டுவிடத் தொடங்கும். இறந்த உடலில் இருந்து வரும் பாக்டீரியாக்கள், அருகில் உள்ளவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற சிந்தனையறிவின் அடிப்படையில் ஈமச்சடங்கில் பங்கேற்றபின் கட்டாயம் குளிக்க வேண்டும் என்று கருதினர். தாங்கள் வளர்க்கும் கால்நடைகள், பறவைகள் போன்றவை சரியாக உணவு உண்ணாமலும், கண்களில் நீர் வடித்துக் கொண்டும் இருந்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு இறப்பு நேரிடும் என்று நம்புவர். பறவை, விலங்குகளுக்கு மரணம் நேரிடும் நாளை அறிந்து கொள்ளும் திறன் உண்டு என்பதால் தங்களின் வீடுகளில் உள்ள கால்நடைகள், நாய், பறவைகள் போன்றவற்றின் இயக்கங்களை வைத்து தங்களுக்கு ஏற்படும் துன்பங்களை அறிந்து கொள்வர். காகங்கள் தங்கள் வீட்டைச் சுற்றி கூட்டமாகக் கத்திக்கொண்டு வட்டமிட்டால் தங்கள் இல்லத்தில் மரணம் நிகழும். காகம் நிமித்தம் உணர்த்தும் பறவையாகக் கருதப்படுவதால் மரணம் குறித்து அறிவுறுத்தும் பண்பு கொண்டதாகக் காகம் கருதப்படுகிறது. இதனை, "நிமித்தக்கூறுகள் உருவாவதற்கு நிமித்தக் காரணிகளின் வியக்கத்தக்க பண்புகள் அடிப்படைக் காரணம் என நினைக்கத் தோன்றுகிறது. காக்கை, ஆந்தை அகிய பறவைகளை நிமித்தக் காரணிகளாகக் கொண்டதிலிருந்து இதனை அறியலாம். மக்கள் ஆந்தையை முக்காலமும் உணர்ந்த இருடியாக (ஞானி) கருதினர். மேலை நாடுகளிலும் ஆந்தையை ஞானம் நிறைவுற்ற பறவையாகக் கருதுவதுண்டு"[7] என்ற கருத்தினடிப்படையில் ஆந்தையும் தங்கள் இல்லத்தினைச் சுற்றி அடிக்கடி வட்டமிட்டுக் கத்திக் கொண்டிருந்தால் தங்கள் இல்லத்தில் உள்ளவர்களுக்கு ஏதேனும் துன்பம் நிகழும் என்பதன் நிமித்தக்குறியாகக் கொள்வர்.

"அனைத்து வழிபாடுகள் மற்றும் விழாக்களிலும் தயாரிக்கப்படும் உணவுகளை முதலில் காகத்திற்குப் படைத்த பின்னரே மக்கள் உணவருந்த வேண்டும் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகிறது. அனைத்துண்ணியான காகம் தான் உண்ணும் உணவை அதிவிரைவில் செரிமானமாக்கும் ஆற்றலுடையது. இத்தகு காகங்களுக்கு உணவிடுதல் மூலம் விடம் தொடர்பான நச்சுத்தன்மை கலந்த பொருட்கள் இருப்பின் அதனை உடனடியாகத் தெரிந்து கொள்ள முடியும் என்னும் கண்ணோட்டத்தின் அடிப்படையில்

காகங்களுக்கு முதலில் உணவிடுதல் என்னும் அறிவியல் பார்வை பற்றிய அறிவு பெற்றுள்ளனர்."[8] இவ்வாறு தங்களைச் சுற்றியுள்ள மனிதர்களின் இயக்கங்களை மட்டுமன்றி அனைத்து உயிர்களின் இயக்கங்களையும் அறிந்து உற்றுநோக்கியுள்ளதன் வழி தங்களின் வாழ்வியலை இயற்கையோடு ஒன்றி வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

**வழிபாடு**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டாரத்தில் உள்ள கொண்டையம்பாளையம் என்னும் ஊரில் அய்யனார் கோயில் ஒன்றுள்ளது. பாம்பு, பூரான், தேள் போன்ற தீமைகளை ஏற்படுத்தக்கூடிய உயிரினங்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டி அய்யனாரை வழிபடுகின்றனர். சித்திரை மாதத்தில் மட்டும் இக்கோயிலில் மிகச் சிறப்பான வழிபாடு நடைபெறும். அத்திருவிழாவன்று பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிபாட்டை மேற்கொள்வர். குயவர்கள் கோயிலின் முன் பாம்பு, பூரான், தேள் போன்றவற்றின் உருவங்களைச் செய்து விற்பனை செய்வர். அவற்றை அனைவரும் வாங்கிச் சென்று கோயிலின் உள்ளே போடப்பட்டிருக்கும் கல்லில் வைத்து உருவம் சிதையுமாறு உடைத்து விட வேண்டும். அவ்வாறு உடைத்து அய்யனாரை வழிபட்ட பின் கோயிலில் கொடுக்கப்படும் திருநீற்றை (சாம்பல்) எடுத்துச் சென்று வீட்டில் உள்ள அனைவருக்கும் கொடுத்த பின் வீட்டில் உள்ள கால்நடைகளுக்கும் வீட்டினைச் சுற்றிலும் போட்டுவிடுவர். கோயிலில் கொடுக்கப்படும் விபூதி சாம்பல் என்பதால் அதிலிருந்து வரும் காரத்தன்மை மிக்க வாசனைக்கு எவ்விதமான விடத்தன்மையுடைய உயிர்களும் தங்களைத் தாக்காது என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடம் நிலவுகிறது. சித்திரை மாதம் கோடை காலம் என்பதால் விடத்தன்மை கொண்ட உயிரிகள் அதிகளவில் வீடுகளுக்கும், குளிர்ந்த தன்மையுள்ள இடங்களுக்கும் வரும். சாம்பல் காரத்தன்மை கொண்டதால் அவற்றின் காரத்தன்மையால் விடத்தன்மை கொண்ட உயிரிகளின் தீய பாதிப்பிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு இத்தகைய வழிபாட்டில் சாம்பல் திருநீராக வழங்கப்படுகிறது. குயவர்கள் தேள், பூரான், பாம்பு போன்றவற்றின் உருவங்களைச் செய்து விற்பனை செய்வதால் அவர்களின் பொருளாதாரத் தேவையை ஈடு செய்யவும் இத்தகு வழிபாட்டு விழாக்கள் துணைநிற்கின்றன.

"தமிழர்களின் பண்பாட்டினையும், பெருமையையும் வெளிக்காட்டும் வகையில் கொண்டாடப்படும் விழா பொங்கல் திருவிழாவாகும். பொங்கல் திருநாளின் முதல் விழாவாகப் போகிப்பண்டிகை மார்கழி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. காப்புக் கட்டுதலுக்கு முந்தைய நாளில் தம் இல்லங்களைத் தூய்மைப்படுத்திப் போகியன்று காப்புக் கட்டுவர். காப்புக்கட்டலில் வேப்பிலை, சிறுபீளைப் பூ (பூளைப்பூ), ஆவாரம்பூ போன்றவற்றைத் தம் இல்லங்களின் முற்றம், வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள், விளைநிலங்கள் மட்டுமின்றி மக்கள் அன்றாடம் புழங்கும் வண்டி, வாகனங்கள் போன்ற அனைத்தின் மீதும் வைப்பர். வேப்பிலை கிருமி நீக்கியாகவும், ஆவாரம்பூவும், பீளைப்பூவும் சுவாசப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கொடுப்பவையாகவும் உள்ளதால் வீட்டின் முற்றத்தில் கிருமித்தொற்றுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்கலாம் என்றும், மார்கழி மாதம் ஓசோன் படலம் பூமிக்கு அருகில் இருப்பதால் கதிர்வீச்சு அதிகளவில் காணப்படும். இதனைத் தவிர்க்கும் நோக்கில் தங்களைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளிலும் வேப்பிலை, சிறுபீளைப்பூ (பூளைப்பூ), ஆவாரம்பூ போன்றவற்றைச் சொருகி வைப்பர்."[9] இவ்வாறு வானிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சிந்தனையறிவும், இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களின் தன்மைகளைக் கண்டு அதன் மருத்துவ அறிவையும் அறியும் திறன் பெற்றவர்களாக மக்கள் விளங்குகின்றனர். இவ்வாறு வானியல் மாற்றங்களையும், அது சார்ந்த பருவகால மாற்றங்களையும் நன்கு உணர்ந்திருந்த நம் முன்னோர்கள் அனைவரும் பயன்படும் வகையில் அவற்றைத் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர்.

**மழை**

வடக்கு மற்றும் தெற்குத் திசையில் மின்னல் தோன்றுதல், நிலவைச் சுற்றிலும் வட்டம் காணப்படுதல், மேகம் கறுத்து மிகவும் இருள் சூழ்தல் போன்றவற்றினை மழை பெய்வதற்கான அறிகுறிகளாகக் கருதுவர். மழை பொழியும் காலம் மற்றும் இயற்கை நிகழ்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கணிப்புகளை சில உயிரினங்களின் செயல்பாடுகள், உணர்வுகள், இயக்கங்கள் ஆகியவற்றை உற்றுநோக்கி அறிகின்றனர். "தேரை என்னும் தவளை அடிக்கடி கத்திக் கொண்டிருத்தல், ஆடுகள் தம் இயல்பிற்கு மாறாக மேய்வதை விட்டுவிட்டு கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து காதுகளை விரைத்துக்கொண்டு

*அசையாமல் அமைதியாக நிற்றல், அடிக்கடி சண்டையிட்டுக் கொள்ளும் சிலந்திகள் பகலில் தன் கூட்டைப் பின்னும் போது அமைதியாக ஒன்று கூடுதல், எறும்புகள் அதன் முட்டையை எடுத்துக் கொண்டு மேடான பகுதிகளில் ஏறுதல் போன்றவற்றால் மழை பெய்யும் என்றறிந்து அதற்கேற்ப முன்னெச்சரிக்கையாகச் செயல்படுவர். தட்டான் தாழப்பறந்தாலும், கோழி தன் சிறகை விரித்துக்கொண்டு மண்ணில் பதுங்கினாலும், நத்தைகள் தம் இருப்பிடத்தை விட்டு இடம்பெயர்ந்து மரங்கள் மற்றும் சுவர்களில் ஏறிச்சென்று தன் தலையை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தாலும், மாலையில் மயில் அகவுதல், மேகத்தைக்கண்டு மயில் தன் தோகைளை விரித்துக்கொண்டு ஆடுதல் போன்றவற்றின் செயற்பாடுகளால் மழை பெய்யும் என்று கருதுவர்.”[10] இத்தகைய இயற்கை மாற்றங்களை உற்றுநோக்கி மழை பெய்யும் சூழல் பற்றி அறியும் சிந்தனை அறிவு பெற்றுள்ளனர்.*

**பூகம்பம்**

*மழை பற்றிய அறிவியல் கண்ணோட்டத்தையொட்டி பூகம்பம் சார்ந்த கண்ணோட்டமாக, பாம்புகள் கூட்டமாக ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடப்பெயர்ச்சி செய்தால் அவ்விடத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களில் பூகம்பம் ஏற்படும் என்ற நம்பிக்கை மக்களின் அறிவியல் சார்ந்த கண்ணோட்டம் ஆகும். பாம்புகள் தனது உணர்வாற்றலின் மூலம் பூமி அதிர்வுகளை முன்கூட்டியே அறிந்து மக்களுக்கு அறிவிக்கும் என்ற நம்பிக்கையும், சிந்தனையும் பூகம்பம் பற்றிய கண்ணோட்டத்திற்கு அடிப்படையாகிறது.*

**உணவு**

*உணவை உருண்டையாகப் பிடித்துக்கொண்டு உண்ணும் போது அவை தொண்டையில் மாட்டிக்கொள்ள வாய்ப்புண்டு என்பதால் உண்ணும் உணவை உருண்டைகளாகப் பிடித்து உட்கொண்டால் குடும்பம் செழிக்காது என்பர். உண்ணும் உணவில் தலைமுடி இருந்தாலும் அல்லது உணவு உண்ணும் போது தும்மல் வந்தாலும் கை கழுவி விட்டு உணவு உண்ண வேண்டும். தலைமுடி உணவில் இருந்தால் அவற்றை தெரியாமல் உண்பதால் அவற்றினால் உடல்நலப் பாதிப்புகள ஏற்படக்கூடும்.*

*சுப நிகழ்வுகளுக்குச் சென்று வாழை இலையில் சாப்பிடும் பொழுது சாப்பிட்டு முடித்த பின் இலையை சாப்பிடுபவரின் பக்கம் பார்த்தவாறு மடிக்க வேண்டும். அவ்வாறு மடிப்பதால் இது போன்ற சுப நிகழ்வுகள் மேலும் மேலும் நடைபெற வேண்டும் என்பது இதன் அர்த்தமாகும். சுப நிகழ்வுகளின்றி அமங்கல நிகழ்விற்குச் சென்று சாப்பிட்டால் சாப்பிட்ட இலையை எதிர்ப்புறமாக மடிக்க வேண்டும். ஏனெனில் இது போன்ற அமங்கல நிகழ்வுகள் இனிமேல் நடக்கக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் உணவு பற்றிய நம்பிக்கைகள் இவ்வின மக்களிடம் காணப்படுகின்றது.”[11] என்று தகவலாளர் ஜெயந்தி என்பவர் குறிப்பிடுகிறார். உணவு உட்கொண்ட பின்பு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு கலந்துண்ணும் தாம்பூலம் தரித்தல் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகின்றது. இத்தகு தாம்பூலம் தரித்தலில் வெற்றிலை, பாக்குடன் சுண்ணாம்பைக் கலந்துண்ணும் போது மனிதர்களுக்கு கால்சியம் சத்து கிடைக்கிறது. விரைவில் செரிமானமாகாத உணவை உட்கொண்டால் தாம்பூலம் தரித்தல் மூலம் செரிமானம் சார்ந்த பிரச்சனைகள் சரியாகும் எனும் அறிவியலறிவு இம்மக்களிடம் காணப்படுகிறது.*

**மரம்**

*மக்கள் தங்களைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடி போன்றவற்றின் செழிப்பு மற்றும் செழிப்பற்ற நிலை ஆகியவற்றைப் பார்வையிட்டு அதற்கேற்ற நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். தங்கள் வீடுகளில் வேப்பமரம், துளசி, தூதுவளை, எலுமிச்சை போன்ற மரங்களை வளர்ப்பதனை நன்மையாகக் கருதுவர். வேம்பு, துளசி, எலுமிச்சை போன்றவை மருத்துவக்குணம் அதிகம் கொண்டுள்ளமையால் உடல்நலம் சார்ந்த பாதிப்புகள் ஏற்படும் போது இவை பயன்தரும் என்றெண்ணி நன்மை தரும் மரங்களை வளர்க்கும் நுண்ணறிவு பெற்றவர்களாக உள்ளனர். “தென்னை மரத்தில் மாடு கட்டினால் கேடு வரும் என்பர். தென்னை மரத்தில் மாடுகளைக் கட்டும் போது அம்மாடுகள் இடும் சாணத்தினால் வண்டுகள் உற்பத்தியாகும். அவ்வண்டுகள் தென்னை மரத்தின் வேர்களை அரித்து மரத்தின் அழிவிற்கு வழிவகுத்துவிடும் என்பதால் தென்னை மரத்தில் மாடுகளை கட்டக்கூடாது என்பர். மேலும் முருங்கை மரத்தை வீட்டில் வளர்த்தல் கூடாது என்றும் கருதுவர். முருங்கை மரம் வலிமையற்றதாக இருப்பதால் அவை எளிதில் உடைந்துவிழும். அம்மரத்தின் மீது குழந்தைகள் ஏறி விளையாட நேரிட்டால் அவை முறிந்து விழுந்து பாதிப்புகளை*

*ஏற்படுத்திவிடும்"[12] என்று கருதி முருங்கை மரத்தை வீட்டின் முன்பு வளர்ப்பதைத் தவிர்க்கின்றனர்.*

***முடிவுரை***

*நாகரிகம், பண்பாடு போன்றவை இன்றைய காலங்களில் மனிதனின் வாழ்வை மாற்றியிருந்தாலும் நம்பிக்கையால் பின்னப்பட்ட மனிதனது மனதில் நம்பிக்கை குறித்த மாற்றங்கள் பெருமளவில் ஏற்படவில்லை என்று கருதமுடிகிறது. இன்றைய நவீன நாகரிகம் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையினை பல வகைகளில் ஆட்கொண்டிருப்பினும் மரபு ரீதியான நம்பிக்கைகளையும் அவை சார்ந்த அறிவியல் கண்ணோட்டங்களையும் மக்கள் உற்றுநோக்கிக் கண்டறிந்து அவற்றை இன்றைய தலை முறையினரும் பின்பற்றி வருவதன் மூலம் மக்கள் நம்பிக்கை மீது வைத்திருக்கும் உறுதிப்பாட்டினை அறியமுடிகிறது. இதன்வழி அடுத்த தலைமுறைக்கு தம் பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டுமல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் எடுத்துச் சேர்க்க வேண்டியது இன்றைய தலைமுறையினரின் கடமையாகும்.*

**துணைநூற்பட்டியல்**


*1.கழக வெளியீடு, நன்னூல் காண்டிகையுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை - 600 018, முதற்பதிப்பு - 1982.*

*2.இளம்பூரணார்,(உ.ஆ), தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை - 600 005, முதற்பதிப்பு - 2005.*

*3.புலியூர்க்கேசிகன், நற்றிணை தெளிவுரை, ராம் பிரசுரம், சென்னை – 600 001, முதற்பதிப்பு - 2013.*

*4.நாராயணசாமி., திருக்குறள் எளிய உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600 098, முதற்பதிப்பு - 1997.*

*5.தகவலாளர், அலமேலு, (60), பெண், 8 ஆம் வகுப்பு, கோப்பம்பாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் - 10.08.2020.*

*6.தகவலாளர், குமுதா, (47), பெண், பட்டப்படிப்பு, வடுகபாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் – 23.11.2020*

*7.சாமி.பி.எல், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை - 600 018, முதற்பதிப்பு - 1976.*

*8.தகவலாளர், ராமசாமி, (64), ஆண், மதிப்பானூர், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் - 12.02.2020.*

*9.தகவலாளர், பழனிச்சாமி, (52), ஆண், 5 - ஆம் வகுப்பு, கெஞ்சனூர், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் – 09.03.2020.*

*10.தகவலாளர், சாந்தி,(48), பெண், பட்டப்படிப்பு, வண்டிபாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் – 08.12.2019.*

*11.தகவலாளர், ஜெயந்தி, (38), பெண், தொழிற்படிப்பு, வரப்பாளையம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் -15.02.2020.*

*12.தகவலாளர், பூங்கொடி, (48), பெண், 10 - ஆம் வகுப்பு, சத்தியமங்கலம், தகவல் சேகரிக்கப்பட்ட நாள் - 25.10.2020.*